[24th March 1960

Sri S. NAGARAJA MONIGAR : இந்த குறிப்பிட்ட ஆஸ்பத்திரிக்கு சர்க்காருடைய எந்த விதமான ஆதரவு அல்லது சகாயமோ கிடையாதா ? அவ்விதம் சர்க்கார் ஏதாவது கொடுத்துக் கொண்டிருந்தால், அந்த செல்வாக்கை உபயோகித்து ஏதாவது இதற்கு பரிகாரம் காண முயற்சிக்குமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : சர்க்கார் உதவி கொடுக்கிறதா இல்லையா என்பதை என்னுடைய நண்பர் அமைச்சர் மாணிக்கவேலு அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ளலாம். எனக்குத் தெரியாது.

Case against the Munsif of Sugamanickkampatti

* 551 *Q.*— **Sri V. S. MANICKASUNDARAM (on behalf of Sri P. S. K. LAKSHMIPATHI RAJ)** : கனம் ரெவினியூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) பழனித் தாலுகா, கஸ்பா பிர்காவிலுள்ள சுகமநாய்க்கன்பட்டி கிராம முன்சீப் விவசாயிகளிடமிருந்து வசூல் செய்த வரிப்பணத்தை மோசடி செய்ததற்காக அவர் மீது தொடரப்பட்ட வழக்கு என்ன வாயிற்று ?

(ஆ) டிபார்ட்மெண்டில் அவர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) The attention of hon. Member is invited to the answer given on 24th March 1959 with reference to question No. 970, dated 24th March 1959.

(*b*) Departmental action was taken against the Village Headman for having given advance receipts in a few cases and he was kept under suspension from 17th February 1956 to 22nd February 1957.

Mr. SPEAKER : கேள்விகள் பதில்கள் முடிவடைந்தன.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS APPROPRIATION BILL, 1960 (L.A. BILL NO. 4 OF 1960).

The Hon. Sri C. SUBRAMANIAM : Sir, I move—

"That the Madras Appropriation Bill, 1960 (L.A. Bill No. 4 of 1960) be taken into consideration ".

Mr. SPEAKER : Motion moved.

"That the Madras Appropriation Bill, 1960 (L.A. Bill No. 4 of 1960) be taken into consideration ".

Sri M. KALYANASUNDARAM : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த உதவி மான்யக் கோரிக்கையில் கேட்டிருக்கக்கூடிய ஒதுக்குவதற்காகக் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த மசோதாவைப் பற்றி நான் பேசும் காலத்தில் நான் இதை எதிர்க்கிறேன் என்று அர்த்தமல்ல. நேற்று அமைச்சர் அவர்கள் கூறின சில கருத்துக்களைப்பற்றி விளக்கங்களை தெரிந்து கொள்வதற்காகத்தான் இதன் மீது நான் பேசுகிறேன். இவ்வளவு பெரும் தொகை கோருவதில் எந்த விதமான தவறும் இல்லை என்று சொன்னார்கள். ரெவினியூ அக்கௌண்டில் சுமார் பத்து கோடிக்கு கேட்டிருக்கிறார்கள். இவ்வளவு பெரிய தொகை வரும் என்று முதலில் எதிர் பார்க்கவில்லை. ஆரம்பத்தில் எதிர்பார்க்க முடியாத சில வேலைகள் வருகிறது. அவைகளை எல்லாம் பணம் ஒதுக்கவில்லை என்று நிறுத்திவிடலாமா என்று கேட்டார்கள். நான் அப்படி வேலைகளை நிறுத்தவேண்டும் என்று சொல்லவில்லை. ஆனால் செய்கின்ற காரியங்களுக்கு எவ்வளவு பணம் செலவு